# நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 8-5 - மாயக்கூத்தா
## (எம்பெருமான் வடிவழகை நேரில் காணமாட்டாது ஆழ்வார் விடாய் விஞ்சி அழுது அரற்றுதல்)

3491 * மாயக்கூத்தா! வாமனா! *
வினையேன் கண்ணா! கண் கை கால் *
தூய செய்ய மலர்களாச் *
சோதிச் செவ்வாய் முகிழதா **
சாயல் சாமத் திருமேனி *
தண்பாசடையா * தாமரை நீள்
வாசத் தடம் போல் வருவானே! *
ஒருநாள் காண வாராயே 1

3492 காண வாராய் என்றென்று *
கண்ணும் வாயும் துவர்ந்து * அடியேன்
நாணி நன்னாட்டு அலமந்தால் *
இரங்கி ஒருநாள் நீ அந்தோ! **
காண வாராய் கருநாயிறுதிக்கும் *
கருமா மாணிக்க[1] *
நாள் நல்மலை போல் சுடர்ச் சோதி *
முடிசேர் சென்னி அம்மானே! 2

3493 முடிசேர் சென்னியம்மா! * நின்
மொய்பூந்தாமத் தண்துழாய் *
கடிசேர் கண்ணிப் பெருமானே! *
என்றென்று ஏங்கி அழுதக்கால் **
படிசேர் மகரக் குழைகளும் *
பவளவாயும் நால்தோளும் *
துடிசேர் இடையும் அமைந்ததோர் *
தூநீர் முகில் போல் தோன்றாயே 3

3494 தூநீர் முகில் போல் தோன்றும் * நின்
சுடர்கொள் வடிவும் கனிவாயும் *
தேநீர்க் கமலக் கண்களும் *
வந்து என் சிந்தை நிறைந்தவா! **
மாநீர் வெள்ளிமலை தன்மேல் *
வண்கார் நீலமுகில் போல *
தூநீர்க் கடலுள் துயில்வானே! *
எந்தாய்! சொல்ல மாட்டேனே 4

[1] மாணிக்கம்

3495 சொல்ல மாட்டேன் அடியேன் * உன்
துளங்கு சோதித் திருப்பாதம் *
எல்லையில் சீர் இளஞாயிறு *
இரண்டு போல் என்னுள்ளவா! **
அல்லல் என்னும் இருள் சேர்தற்கு *
உபாயம் என்னே? ஆழி சூழ் *
மல்லை[2] ஞாலம் முழுதுண்ட *
மாநீர்க் கொண்டல் வண்ணனே! 5

3496 கொண்டல் வண்ணா! குடக்கூத்தா! *
வினையேன் கண்ணா! கண்ணா * என்
அண்டவாணா! என்று என்னை * ஆளக்
கூப்பிட்டு அழைத்தக்கால் **
விண் தன்மேல் தான் மண்மேல் தான் *
விரிநீர்க் கடல் தான் மற்றுத் தான் *
தொண்டனேன் உன் கழல் காண *
ஒருநாள் வந்து தோன்றாயே 6

3497 வந்து தோன்றாய் அன்றேல் * உன்
வையம் தாய மலரடிக் கீழ் *
முந்தி வந்து யான் நிற்ப *
முகப்பே கூவிப் பணி கொள்ளாய் **
செந்தண்கமலக் கண் கை கால் *
சிவந்த வாயோர் கருநாயிறு *
அந்தமில்லாக் கதிர் பரப்பி *
அலர்ந்ததொக்கும் அம்மானே! 7

3498 ஒக்கும் அம்மான் உருவம் என்று *
உள்ளம் குழைந்து நாணாளும் *
தொக்கமே கப்பல் குழாங்கள் *
காணும் தோறும் தொலைவன் நான் **
தக்க ஐவர் தமக்காய் அன்று *
ஈரைம்பதின்மர் தாள் சாய *
புக்க நல்தேர்த் தனிப் பாகா! *
வாராய் இதுவோ பொருத்தமே? 8

3499 இதுவோ பொருத்தம்? மின்னாழிப்
படையாய்! * ஏறும் இருஞ்சிறைப்புள் *
அதுவே கொடியா உயர்த்தானே! *
என்றென்று ஏங்கி அழுதக்கால் **
எதுவேயாகக் கருதுங்கொல்? *

---

[2] மல்லல்

இம்மாஞாலம் பொறை தீர்ப்பான் *
மதுவார் சோலை * உத்தர
மதுரைப் பிறந்த மாயனே 9

3500 பிறந்த மாயா! பாரதம்
பொருத மாயா! * நீ இன்னே *
சிறந்த கால் தீ நீர் வான் * மண்
பிறவுமாய பெருமானே! **
கறந்த பாலுள் நெய்யே போல் *
இவற்றுள் எங்கும் கண்டுகொள்[3] *
இறந்து நின்ற பெருமாயா! *
உன்னை எங்கே காண்கேனே? 10

3501 * எங்கே காண்கேன்! ஈன்துழாய்
அம்மான் தன்னை * யான்? என்றென்று *
அங்கே தாழ்ந்த சொற்களால் *
அந்தண்குருகூர்ச் சடகோபன் *
செங்கேழ் சொன்ன ஆயிரத்துள் *
இவையும் பத்தும் வல்லார்கள் *
இங்கே காண இப்பிறப்பே
மகிழ்வர் * எல்லியும் காலையே 11

**அடிவரவு:** மாய காண முடி தூநீர் சொல் கொண்டல் வந்து ஒக்கும்
இதுவோ பிறந்த எங்கே எல்லி

[3] கண்டுகோள்